தென்மொழி

எந்தமிழர் வாழ்வார் இனி

தென்றிசைத் தீவில்
தமிழரை நாள்தோறும்
கொன்றுகுவிக் கின்ற
கொடுமைகள் - பொன்றவே
சிங்களவர் வீழ்ந்து
சிறுமைத் துயரகல
எங்களவர் வாழ்வார் இனி!

பாய்படுக்கை யின்றிப்
பசியால் மிகவாடி
நோய்ப்படுக்கை யுற்றுநித்தம்
நொந்தழுது - மாய்தலின்றி
வாழத் தலைப்படு நாள்
நண்ணிற்றால் நன்றுகாண்
ஈழத் தமிழர்க் கினி!

பயிர் வளர்த்த செய்விட்டு
மாற்றாரை யஞ்சி
உயிர்பிழைக்கத் திக்கெல்லாம்
ஓடும் - துயர்தீர்ந்து
சொந்த அரசமைத்துச்
சூழ்புதுமை யோங்கவே
எந்தமிழர் வாழ்வார் இனி!

- இறை

உள்ளே...

சாதி யடையாளங்களை அறவே நீக்குக!

'தனித்தமிழ்', 'இயக்கம்' - ஒரு விளக்கம்

திருவள்ளுவர் காட்டும் இருபாற் கற்பு

பழைமை நலம்

மயங்க வேண்டாம்

நன்மையும் உண்மையும்

செய்திகள்

மற்றும் பிற...

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

வடி - 29
ஓலை - 5

தி.பி. 2028 விடை - 1997 மே

அன்றுபோல் இல்லை...!

ஓடி ஒளிந்துன்
ஒளிமூழ்கி ஒண்டமிழிற்
பாடிக் கதைசொல்லிப்
பாங்கியரோ - டாடினமே
அன்றுபோல் இல்லை
அணிநிலவே; நீளிரவில்
நின்றிறைக் கின்றாய் நெருப்பு!

வண்ணச்சிற் றாடையொடு
வாயிற் குதித்திறங்கி
மண்ணிற்சிற் றில்ல
மருங்கமர்ந்தே - உண்ணுவமே
அன்றுபோல் இல்லை
அணிநிலவே; மூண்டெரிதீக்
குன்றுபோல் ஆனாயோ கூறு!

தேங்கிக் கிடக்கும்
இரவின் குளிரொளியில்
தூங்கிக் கிடந்தோமே
தண்ணிலவே - ஆங்கதுபோல்
இன்றில்லை; என்னை
எரிக்கொழுந்தாய் வாட்டுகின்றாய்
நன்றிதுவோ என்செய்தேன் நான்!

முத்தை இறைத்த
முழுநீலக் கம்பளத்தில்
தத்தி நடைபயிலும்
தண்ணிலவே! பாலொளியைப்
பாய்ச்சுகின்றா யில்லை
பருநெருப்பை வாடையிலே
காய்ச்சுகின்றாய் இன்று கனன்று!

- பாவலரேறு

(தென்மொழி - சுவடி : 13, ஓலை : 4)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி 29) திபி உ0உஅ விடை (மே '97) (ஓலை 5

சாதி யடையாளங்களை அறவே நீக்குக!

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் கடந்த இரு கிழமைகளுக்கு மேலாக வன்முறை நெருப்பு கொழுந்து விட்டெரிகின்றது. உயிரிழப்புகளும் பொருட்சேதங்களும் தொடர்கின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கை சீர்குலைந்து கிடக்கிறது. கலவரங்களை யொடுக்கப் புதிய சட்டம் இயற்ற வேண்டிய அளவுக்கு அரசு - காவல்துறைக் கட்டுப்பாடு கூட வலிவிழந்துள்ளது.

இத்தகைய நிலைகள் நம்மை வருத்துகின்றன. ஆனால், இவ் அழிம்புகளுக்கெல்லாம் அடிப்படைக் கரணியம் சாதிப் பூசல் என்பது, அதைவிட நம்மைப் பெரிதும் வருத்தத்தில் ஆழ்த்துகின்றது.

ஒருபக்கம் சாதி வேறுபாடுகளைக் களைந்தொழிக்க வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்தாலும் மறுபுறம் சாதியை வளர்க்கின்ற செயல்களும் தெரிந்தோ தெரியாமலோ தொடர்ந்து நடந்து வருகின்றன. சாதியின் பெயரால் உரிமைகள் மறுக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும் அடக்கியொடுக்கப்பட்டும் கிடக்கும் மக்களை மேம்படுத்தச் சலுகைகள் அளிப்பதற்குச் சாதி பற்றிய குறிப்பு தேவை என்றாலும், சாதியின் பெயரால் ஏடுகளும், இயக்கங்களும், மாநாடுகளும் பேரணிகளும் நடத்த இடங்கொடுப்பது சாதியை மேன்மேலும் வளர்க்கவே பயன்படுகின்றது. சாதியின் பெயராலான கல்விக்கூடங்களும், கலியாண மண்டபங்களும், விடுதிகளும்,

அறக்கட்டளைகளும், பிறவும் சாதியை நிலைப்படுத்திக் கொண்டுள்ளன. மக்களை எளிதில் வசப்படுத்தும் சாதித் தலைவர்கள் உருவாவது தவிர்க்க முடியாததாகிறது. அவர்களுடைய சாய்கால் தமக்குத் தேவைப்படுவதால், அரசியல்காரர்கள் அவர்களைத் தட்டிக் கொடுக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் விரும்பத்தகாதனவாக இருந்தாலும் புறக்கணிக்க முடியவில்லை. ஆகவே சாதி மேன்மேலும் தழைத்து வளர்கிறது.

ஆண்டாண்டு காலமாகத் தமக்கு அடிமைகளாய்க் கிடந்தவர்கள் தமக்குச் சமமாகவும், தம்மைவிட மேம்பட்டும் வளருவதைச் செரித்துக் கொள்ள முடியாத மேட்டுக்குடியினரும், நீண்ட நெடுங்காலமாகத் தாம் வஞ்சிக்கப்பட்டதை யுணர்ந்து ஒரோவழிப் பழிவாங்கவும் நினைக்கும் தாழ்த்தப்பட்டவர்களும் உள்ளூர்ச் சிக்கல்கள் கரணியமாக உரசிக் கொண்டு மோதமுறப்பட்டுக் கலவரங்கள் வெடிக்கின்றன. இது தான் உண்மை நிலை!

மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்கள் பெயரைச் சூட்டுவது தொடர்பானதே இப்போதைய கலவரம்! மாவட்டங்கள் தலை நகரங்களின் பெயராலும், போக்குவரத்துக் கழகங்கள் அரசின் பெயராலும் மட்டுமே வழங்கப்பட்டால் போதுமானது. அவற்றுக்கெல்லாம் தலைவர்கள் பெயர் சூட்டவேண்டும் என்னும் கட்டாயத் தேவை என்ன? தலைவர்கள் பெயர் என்று பொதுவாகச் சொன்னாலும் அவற்றுள் பெரும்பாலானவை சாதியுணர்வை அடிப்படையாகக் கொண்டனவே என்பது வெளிப்படை.

வெள்ளையத் தேவனும், சுந்தரலிங்கமும் வீரபாண்டியக் கட்டபொம்மனின் வீரத் தளபதிகள் - விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று முதல்வர் குறிப்பிடுகிறார். உண்மையாகச் சொல்வதானால் அவர்களின் பெயர் அந்தக் காரணத்தையா இன்று தாங்கி நிற்கின்றன? அவை சாதியடையாளங்கள் என்பதால்தானே, அவற்றை ஏற்றும் எதிர்த்தும் சாதி அணிகள் உருவாகின்றன.

பொதுநல அமைப்புகளைச் சார்ந்தவர்களும், பகுத்தறிவுப் பாசறைக்கு அப்பாற்பட்டவர்களுங்கூட இப் பெயர்களையெல்லாம் நீக்கிவிடலாம் என்று ஏடலுரைக்கும்போது, அரசு தயங்குவது ஏன்? எத்தனைச் சட்டங்கொணர்ந்தாலும் மக்கள் மனப்பான்மை மாறாத நிலையில் அவை என்ன பயனை விளைத்துவிடும்?

ஆகவே, சாதியுணர்வைத் தூண்டி மக்களிடையே பகைமையையும் கலவரத்தையும் விளைக்கும் வகையில் மாவட்டங்கள், போக்குவரத்துக் கழகங்கட்குச் சூட்டப்பட்ட அனைத்துச் சிறப்புப் பெயர்களை அரசு அறவே நீக்குக!

- இறை

'தனித்தமிழ்', 'இயக்கம்'

- ஒரு விளக்கம் !

தமிழிற் பிறமொழிச் சொற்களைக் கலந்து வழங்குவது 'மணிப் பிரவாளம்' என்று ஒரு காலத்தில் சிறப்பித்துப் பேசப்பட்டிருப்பினும், இன்று அந்நிலை இல்லை. பிறமொழிச் சொற்களை ஏராளமாகத் தமிழிற் கலந்து எழுதுபவர்கள், பேசுபவர்கள் மட்டுமன்றிக் 'கலப்புத் தேவையே' என்று கருதுபவர்களுங்கூட, அதனைப் பெருமைக்குரிய ஒன்றாக வெளிப்படுத்தத் துணிவதில்லை.

இவ்வாறு பிறமொழிக் கலப்பைத் தவிர்த்துத் தமிழைத் தூய்மையாக வழங்க வேண்டும், துறைதோறும் வளர்க்க வேண்டும் என்னுங் கோட்பாட்டை வகுத்து, அதனை முழுமையான கடைப்பிடியாகக் கொண்டு, முன்னோடியாக வாழ்ந்து காட்டியவர் பேரறிஞர் மறைமலையடிகளாராவர். அடிகளார் முயற்சிக்கு முன்னரே, 'தமிழில் வரைமுறை யின்றிப் பிறமொழி கலப்பதைத் தவிர்க்க வேண்டும்' என்னுங் கருத்து அரும்பியதேனும், அதன் நோக்கம் தமிழ்நலம் பற்றியதுமன்று; குறிப்பிடத்தக்க அளவுக்கு அது செயல்வடிவம் பெறவுமில்லை. பரிதிமாற் கலைஞரின் முயற்சியும் பெயரளவினதே!

வழக்கிறந்த பழந்தமிழ்ச் சொற்கள் பலவற்றைப் புதுக்கியும் புதுச்சொற்கள் பலவற்றைப் புனைந்தும், பிறமொழிச் சொற்களுக்கு நேரிய தமிழ்ச்சொற்கள் இவையெனக்காட்டியும், உரையும் பாவுமாகிய இருவகை நடையிலும், பலதுறை சார்ந்த ஆராய்ச்சியும், மொழிபெயர்ப்பும் புத்தாக்கமுமாக அடிகளார் ஆக்கிய அருநூல்களும், ஆற்றிய அறிவார்ந்த சொற்பொழிவுகளும் பழைமைப் போக்கினரைப் பதைபதைக்க வைத்ததோடு, அருந்தமிழ் ஆர்வலர்களிடையே விழிப்புணர்வையும் மனஎழுச்சியையும் பெருமித நடையையும் ஏற்படுத்தின!

அடிகளார் வழியில் அடுத்தடுத்த தலைமுறையினரான அறிஞர் பெருமக்கள் தெளிவும் வலிவும் பெற்றுத் தொடர்ந்து வளர்ந்து வருகின்றனர். எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கொண்டிருந்த காலம் மலையேறிப் போய்விட்டது. தமிழ் புறக்கணிக்கப்படுவதை எதிர்த்துப் பல்வேறு வடிவில் கிளர்ச்சிகள் மூளுகின்றன!

இவ்வெழுச்சிகளுக்கு அடிப்படையான மொழித் தூய்மைக் கோட்பாட்டைத் 'தனித்தமிழ்' என்றும், அதனைக் கடைப்பிடித்தலும்

இறைக்குருவனார்

வலியுறுத்தலுமாகிய முயற்சியைத் 'தனித் தமிழ் இயக்கம்' என்றும், அவ்வியக்கத்தை அடிகளார் தோற்றுவித்தார் என்றும் பலராலும் தொடர்ந்து பேசப்படுகின்றது; எழுதப்படுகின்றது. ஆராய்ச்சிகளும் வெளியீடுகளும் தொடர்கின்றன. ஆகவே இதுபற்றி மேலும் சிலவற்றைத் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாதது.

பிறமொழிக் கலப்பின்றி இயல்பாக வழங்கும் தூய தமிழே தமிழாவதன்றிக் கலப்புமொழி எவ்வாற்றானும் தமிழாகாது. எனவே, தனித்தமிழ் என்பது தமிழில் ஒருவகைப் பாகுபாடு என்று பொதுநிலையினர் கருதுமளவுக்கு அதனைப் பெரிது படுத்துவது கலவைத் தமிழைத் தமிழென்று கொள்வதற்கு ஒருவகையில் இடந்தருவதாகவும், அப்பெயராலேயே அதனை ஓரங்கட்டுவதற்கு வழிவகுப்பதாகவும் அமையும். ஆகவே, நாம் வழங்குவதே தமிழாதலால், எதிரிகள் கையாளுவதைக் கலவைத் தமிழென்று சுட்ட வேண்டுமே யல்லாமல் நாம் நம்மை வேறுபடுத்திக்கொண்டு வெளிச்செல்லக்கூடாது.

இனி, இத் 'தனித்தமிழ்' என்னுஞ் சொல்லமைப்பை முதன் முதலிற் கட்டியுரைத்தவர்,

"ஐந்தெழுத் தாலொரு பாடையென்று
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே"

என்று தமிழை ஏகடியம் பேசியதோடு.

"யானும் அதுவே அறிக!"

என்று அம் முழுமக்களோடு தம்மையும் அஃறிணையாக்கி உளப்படுத்திப் பெருமைப்பட்டுக்கொண்ட 'இலக்கணக் கொத்து' சாமிநாதரேயாவர்.

" அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள்
ஒன்றே யாயினுந் தனித்தமிழ் உண்டோ?"

என்று அவர் எழுப்பிய வினாவிலேயே 'தனித்தமிழ்' முதன்முதலில் இடம்பெற்றுள்ளது. அவ் வினாவுக்கு விடையாகத் தனித்தமிழ் என்னும் பெயர்தாங்கிய நூல்கள் வெளிவருவது ஒருவகையில் வரவேற்கத் தக்கதே யாயினும் பெரும்பயனற்றது; பிறநிலைகளை நோக்கத் தேவையுமற்றது.

அடிகளார் மொழித் தூய்மைக் கோட்பாட்டைக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்திப் பல்துறைசார்ந்த தம் அருநூல்களை எழுதிக்காட்டியதன்றித் 'தனித்தமிழ்' என்பதைப் பெரிதுபடுத்தி, அப்பெயர் தாங்கியதாகவோ, அதனை விரித்து விளக்குவதாகவோ ஒரு நூல்தானும் எழுதினாரல்லர். (தனித்தமிழ்க் கட்டுரைகள்

என்னும் நீலாம்பிகையம்மையாரின் நூல், பிறமொழி கலவாத நடையில் எழுதப்பட்ட, பல்பொருள் குறித்த கட்டுரைகளின் தொகுப்பே.) சில கட்டுரைகள் வாயிலாகவும், தம் நூல்களின் முன்னுரைகள் மூலமுமே மொழித் தூய்மைக் கோட்பாட்டை அடிகளார் வெளிப்படுத்தியுள்ளார். மிக இன்றியமையாத நிலையில், வேறுபாடு தெரித்தற்பொருட்டு அடிகளார் 'தனித்தமிழ்' என்னுஞ் சொல்லை ஆங்காங்கு அருகிய ஆட்சியாகக் குறித்துச் செல்வதன்றி, அது தமிழில் ஒருவகைப் பாகுபாடு என்று கருதுமளவுக்கு அதனைப் பெருக வழங்கிலர்.

பிறமொழி கலவாமையை உடன்பாட்டு வகையான் சுட்டுவதே தனித்தமிழ் என்னுங் குறியீடு. அதனைத் 'தனித்தமிழும் கலப்புத்தமிழும்' என்பதுபோல், இன்றியமையா இடங்களிலேயே அடிகளார் கையாண்டுள்ளார். அன்றியும் அடிகளார் மேற்கொண்ட அறிவார்ந்த நன்முயற்சி சொற்கலப்பைத் தவிர்த்தல் என்னும் நிலையில் மட்டுமே யமையாது, அதற்கு மேலும் தமிழர்தம் மொழி, இலக்கியம், வரலாறு, சமயம் ஆகியவற்றையும் மற்றும் வாழ்வியல் நிலைகளையும் உள்ளடக்கிய விரிவான களமுடையது. அது 'தனித் தமிழ்' என்பதனால் மட்டும் முழுமையடையாது.

இனி, அடிகளார் 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் பெயரிலோ, தனித்தமிழ் என்னுங் குறியீட்டை யொட்டிய வேறு பெயரிலோ அமைப்பு எதனையும் தொடங்கவில்லை.

கிறித்தவ நிறுவனத்தைச் சார்ந்த கல்விக் கூடத்தில் அடிகளார் கல்வி பயின்றமையால், அம் மாணவப் பருவத்தில் அங்கு நிகழ்ந்த மதம் பரப்பல் உணர்வுத் தாக்கத்தின் மறுவிளைவாக, அவ்விளந்தைக் காலத்தில் அவர் 'இந்து மதாபிமானிகள் சங்கம்' என்னும் அமைப்பை நாகை - வெளிப்பாளையத்தில் நிறுவி நடத்திவந்தார்.

நாகையினின்றும் சென்னைக்குக் குடிபெயர்ந்த பின்னர் அடிகளார் தோற்றுவித்த அமைப்பு 'சைவசித்தாந்த மகா சமாசம்' ஆகும். அற்றைநாளில் வடபுலத்தில் தோற்றுவிக்கப்பெற்ற ஆரியசமாசம், பிரமசமாசம் என்னும் பேரமைப்புகள் பெருஞ் சாய்காலொடு இந்தியத் துணைக்கண்டம் எங்கணும் விரைந்து பரவிவந்தமையால், தமிழ்மக்களின் சமயநெறிக்கு மாறான அவையிற்றைத் தமிழ்நாட்டில் பரவவொட்டாது தடுத்து நிறுத்தும் நோக்கொடு அடிகளாரால் தோற்றுவிக்கப்பட்ட பேரமைப்பான சைவசித்தாந்த மகா சமாசம் தமிழ் நாட்டின் பல்வேறு நகரங்களில் கிளைபரப்பிச் சிறப்புறச் செயலாற்றினும், பின்னாளில் அடிகளார் அதன் தொடர்புகளிலிருந்து விடுபட்டபின், நாளடைவில் செயலொடுங்கி, ஒருவாறு தொடர்ந்து, பின்னர்ச் 'சைவசித்தாந்தப் பேரவை' என்று பெயர்மாற்றம் பெற்று, இன்று சென்னையில் ஒரு தனியமைப்பாய்ச் சீராக இயங்கிவருகின்றது.

துறவுபூண்டு பல்லவபுரத்தில் குடிபுகுந்த பின்னர் அடிகளார், வள்ளலார் வழியில் 'சமரச சன்மார்க்க சங்கம்' என்னும் அமைப்பை நிறுவினார். ஆசிரியர் - மாணவர் முறையில் அமைக்கப்பெற்ற அச்சங்கமே பின்னாளில் பொதுநிலைக் கழகமாயிற்று.

இவ்வாறு அமைப்புகளை நிறுவி இயக்குவதில் ஆர்வமும், செயற்றிறனும், பட்டறிவும் வாய்ந்த அடிகளார் மேற்கூறியாங்குத் தனித்தமிழ் என்னும் பெயர்த் தொடர்புடைய அமைப்பு எதனையும் நிறுவவில்லை. ஆயினும் கி.பி. 1916-ஆம் ஆண்டில், அடிகளார் 'பெற்ற தாய்தனை' என்னும் திருவருட்பாவில் இடம்பெற்றிருந்த தேகத்தைச் சுட்டிக்காட்டி, அதனையே தலைக்கீடாகக் கொண்டு தம் மகள் நீலாம்பிகையாருக்கு மொழிநலத்தின் முதன்மையை அறிவுறுத்தி, அம்மையார்தம் வேண்டுகோளையே ஒரு விரிச்சியாகக் கொண்டு, மொழித்தூய்மை பேணுவதற்கு உறுதி மேற்கொண்ட நிகழ்ச்சியே 'தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றம்' என்று பலரால் குறிப்பிடப்படுகின்றது.

அவ்வாறு குறிப்பிடுவது ஒரு புகழ்ச்சி வழக்கேயன்றி, அது ஓர் இயக்கத்தின் தொடக்கமாகக் கொள்ளத் தக்கதன்று என்பது, முன்னைச் சங்கங்களும் சமாசமும் போல் அடிகளாரால் மொழித் தொடர்பான அமைப்பு ஏதும் முறையாகக் கட்டப்படாமையாலேயே அறியப்படும்.

இனி, அடிகளார்பால் ஆன்ற மதிப்புக் கொண்ட பாவேந்தர் பாரதிதாசனார், மிக இன்றியமையாத இடங்களில் 'தனித்தமிழ்' என்னுங் குறியீட்டைச் சுட்டியிருப்பினும், மொழித் தூய்மைக் கோட்பாட்டை முன்னிறுத்தித் தமிழின் பெருமைகளை எடுத்துரைத்தும், பிறமொழிக்கலப்பால் நேரும் சிறுமைகளையும் சீரழிவுகளையும் தொடுத்துரைத்தும், இளைஞர்களிடையே தமிழுணர்வையூட்டி, அவர்களை ஆக்கப்பணிகளில் ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு தாம் இயற்றிய நூலைத் 'தமிழியக்கம்' என்றதன்றித் தனித்தமிழ் இயக்கம் என்று குறிப்பிடவில்லை.

இனி, அடிகளார் வழியில் அருந்தமிழ்ப் பணியில் ஈடுபட்டுப் பிறமொழிப் பிணிப்பினின்னும் தமிழை முழுமையாக விடுவித்தலையும், தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலக முதன்மொழி என்று நிலைநாட்டுதலையுமே தம் வாழ்நாட் பெரும்பணியாக மேற்கொண்டு அயராதுழைத்த மொழி நூல் மூதறிஞர் தேவநேயப்பாவாணர் அவர்கள், 'தமிழ் என்பதே தனித்தமிழ்தான்; தனித்தமிழ் என்று கூறவேண்டியதில்லை; கலவைத் தமிழ் தமிழாகாது' என்னும் அழுத்தமான கருத்துடையவர். எழுத்தில் மட்டுமன்றிப் பேச்சிலும் மொழித் தூய்மையை இயல்பாகக் கடைப்பிடித்துவந்த மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் தனித்தமிழ்

என்பதனை விளக்கத்தின் பொருட்டு ஆங்காங்கு மிகச் சில இடங்களிலேயே குறித்துள்ளார்.

கடந்த முப்பதாண்டுகட்டு முன் திருச்சிராப்பள்ளியில் தனித்தமிழ்க் கழகத்தார் கூட்டிய மாநாட்டில், மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் தலைமையில் மொழித் தூய்மைக் கோட்பாட்டை முன்வைத்து விரிவான அமைப்பொன்றை நிறுவ முற்பட்டபோது 'அது தனித்தமிழ்க் கழகம் என்றிருத்தல் கூடாது; தமிழ்க் கழகம் என்றுதான் இருத்தல் வேண்டும்' என்று பாவாணர் பெரிதும் வலியுறுத்தினார். அத் தமிழ்க் கழகமே பன்னாடு தழுவிய அளவில் - எதிர்கால நோக்கோடு 'உலகத் தமிழ்க் கழகம்' எனப் பெயர்பெற்றது. அதற்கான அமைப்பு மாநாட்டை நடத்திய தனித்தமிழ்க் கழகமும் தனிமை தவிர்த்து அதில் ஒன்றியது.

இனி, பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் அருந்தமிழ் ஆசிரியப் பெருந்தகையான மொழிஞாயிறு பாவாணர் அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு தொடங்கிய 'தென்மொழி' இதழ், பல்லாண்டுக் காலம் தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ் என்னும் பெயர்விளக்கத்துடன் வெளிவந்து கொண்டிருந்தாலும், அது கடலூரினின்றும் சென்னைக்கு இடம்பெயர்ந்த பின்னர்ப் பாவாணர் அவர்கள்தம் ஏடலின்படி 'தனித்தமிழ்' என்னுங் குறியீடு அதினின்றும் தவிர்க்கப்பட்டது.

இவ்வாற்றால், 'தனித்தமிழ்' என்னுங் குறியீடு, பெருவழக்காக கைக்கொள்ளத் தக்கதன்று என்பதும், அக்குறியீடு தாங்கிய முறையான அமைப்பு ஏதும் இல்லை என்பதும் அவ்வாறு சில முளைப்பதும் அதன் பொருட்டுச் சிலர் முனைவதும் வரவேற்கவோ, பாராட்டவோ தக்கனவல்ல என்பதும், பிறவும் தெளியப்படும். ●

- பாவலரேறு ஐயா அவர்களின் அரிய படைப்பிலக்கியம்.
- செறிவுறு பாக்களொடு விரிவுறு விளக்கங்களையும் உடன் கொண்டது.
- செம்மையான பதிப்பு

நூறாசிரியம்

விலை : உரு : 100.00

பதிவஞ்சலில் பெறவிரும்புவோர்

உரு 115 (நூற்றுப்பதினைந்து மட்டும்) விடுக்க.

தொடர்புக்கு :

தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்

5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

திருவள்ளுவர் காட்டும் இருபாலார் கற்புநிலை!

------------ பாவலரேறு ------------

"இங்குப் பெண்ணைச் சிறப்பித்துக் கூறும் அதே பொழுதில் அவளுக்கு வற்புறுத்தப் பெறும் கற்பியல் கோட்பாடு என்பது, இல்லறவியலுக்கு மிக இன்றியமையாத கோட்பாடாகும். இது பெண்ணுக்கு மட்டும் உரியதாகத் திருவள்ளுவர் குறிப்பிடவில்லை. ஆணுக்கும் இது பெரிதும் வற்புறுத்தப்பெறுகிறது என்பதை நாம் மறத்தல் கூடாது. ஆரியவியலில் பெண் கற்பே மிகுதியும் வலியுறுத்தப்பெறுகிறது. ஆண் கற்பு அவ்வாறு பெரிதும் வலியுறுத்தப் பெறுவதில்லை என்பதையும் இங்கு நினைவுகூர்க. திருக்குறளில், பெருமை அதிகாரத்துள் வரும்,

'ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு' 974

என்னும் குறளில் ஆணுக்குக் கற்பு வலியுறுத்தம் தெளிவாகச் சுட்டப் பெறுகிறது. ஓர் ஆணுக்குப் பெருமையே, தன் கணவனையே நினைந்தொழுகும் ஒருமை மன மகளிர் போலத் தானும் தன்னையே நெகிழ விடாது நிலைநிறுத்திக்கொண்டு ஒழுக்கம் காப்பதில்தான் உண்டு என்று இதில் கூறப்பெறும் ஆழமான கருத்து மிகவும் கவனிக்கத் தக்கது. இக் கருத்து இல்லறவியலில் கூறப்பெறாமல், பொருட்பாலில், குடியியலில் கூறப்பெறுவது, இன்னும் சிறப்பு மிக்கதும் வலிவு பொருந்தியதும் ஆகும் என்க. என்னை?

இல்லறம் என்பது பொதுமைபடாதது; அகத்தது; அமைவு நிலை கொண்டது; எனவே ஒரு பெண்ணின் கற்புநிலை என்பது. அவள் கணவற்கும், அக் குடும்பத்திற்கும் மட்டுமே தெரிந்தொழுக வேண்டிய தேவை சான்றது. அந்நிலை மாண்பு *(51, 53)*, மாட்சி *(52)*, பெருமை *(54)*, தகை *(56)*, நிறை *(57)*, சிறப்பு *(58)*, புகழ் *(59)* - என்னும் உயர்வுகளுக்குரியது.

ஆனால், ஓர் ஆணுக்குரிய கற்பு என்பது, இல்லறத்தினும், பொதுவறத்திற்கு உரியது. பொதுமைப்படுவது, ஒருவன் இல்லத்தை விட்டு, பொருளீட்டத்திற்கெனப் புறநிலைக்கு வந்து, அரசொடும், குடியொடும், நட்பொடும் புழங்குநிலை கொள்ளுங்கால்; கடைப்பிடித்தொழுகும் கடமையும் பெருமையும் சான்றது. எனவேதான், ஆணுக்குரிய கற்புநிலை, பொருட்பாலில், குடியியலில்,

மானம் அதிகாரத்திற்குப் பின்னும், சான்றாண்மை, பண்புடைமை அதிகாரங்களுக்கு முன்னும், பெருமை அதிகாரத்துள் வைக்கப் பெற்றுப் பேசப்பெறுகிறது. மானவுணர்வு கெட்டால், ஆணுக்கு ஒழுக்கவுணர்வு நெகிழ்வு கொள்ளும் என்பதை நினைவுகூரவும், அது, தன் சான்றாண்மைக்கும் பெருமைக்கும் இழுக்கு என்பதை உணர்த்தவும், அந்நிலை பெரும்பாலான ஆண்களுக்கு நேருங்கால், அக்குடிமையே கெடும் என்று எச்சரிக்கவுமே, அவ்விடத்தில் எடுத்துக் கூறப்பெற்றது. பெண் கற்பு அகநிலை என்றால், ஆண் கற்பு புறநிலை என்றும், பெண் கற்பு குடும்பத்திற்குப் பெருமையும் *(52)*, இல்லறத்திற்கு ஏற்றமும் *(53)*, கணவனுக்குத் தலைநிமிர்வும் *(59)* தருவதென்றால், ஆண் கற்பு, குடிமைக்குப் பெருமையும் (இயல்), அவனுக்குத் தன்மான ('மானம்' - அதிகாரம் - *97*) உணர்வையும், பிறர் மதிக்கத் தக்க, பின்பற்றத் தக்க சால்பையும் ('சான்றாண்மை' அதிகாரம் - *99*) பெற்றுத் தருகிறது.

இவையன்றிப், பெண்கற்புக்கும் ஆண் கற்புக்கும் உள்ள இன்னொரு நுட்பமான வேறுபாட்டையும் இங்கு ஆசிரியர் தெளிவுபடுத்திக் கூறுகிறார்.

அஃதென்னெனில்,

ஒரு பெண், தனது கற்பைத் தானும் காத்துக்கொள்ளல் வேண்டும்; அவளைச் சார்ந்தவர்களும் அதைக் காப்பதற்குத் துணை நிற்றல் வேண்டும். ஏனெனில் அவள் உளத்தாலும் உடலாலும் மென்மையானவள்; (உள்ளத்தால் அன்பும் தாய்மையும் மென்மையானவை; உடலால் பெண்மையும், உறுப்பாண்மையும் மென்மையானவை - என்று ஓர்ந்து உணர்க.) எனினும், மற்றவர் காக்கும் காப்பைவிடத் தான் காத்துக்கொள்ளும் காப்பே சிறந்தது என்பதை உணர்தல் வேண்டும். *(57)*, என்பது.

ஆனால், ஓர் ஆண், தன்னுடைய கற்புணர்வைத் தானேதான் காத்துக்கொள்ள முடியும். மற்று, அவனுக்கு வாய்க்கும் பிற சூழல்களெல்லாம் அவன் தன்னொழுக்கத்திற்கு இழுக்குச் சேர்ப்பவையே! என்னை? அவன் இல்லத்தினின்று வெளியே தனித்து இயங்குவது; அவனது நட்பு - அது தீ நட்பாகவும், கூடா நட்பாகவும் இருக்கலாம். அவன் ஒரு பெண் விருப்பனாக இருந்தால், 'வரைவின் மகளிர்' பால் அவன் உள்ளம் ஈர்த்துச் செல்லக் கூடும். (நட்பியலில், பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர் அதிகாரங்களை எண்ணுக.) எனவே, இவ்வறமல்லாத தீநெறிகளிலிருந்து அவனை அவனேதான் காத்துக்கொள்ளல் வேண்டும். இதனாலேயே 'பெருமையும் தன்னைத்தான் காத்து ஒழுகின் உண்டு' *(974)* என்பார், ஆசிரியர்."

- 'திருக்குறள் மெய்ப்பொருளுரை'

தமிழ்க்களம் அமைக்கத் துணை நிற்போம்!

அனைவரும் போற்றத்தக்க பெருமகனார் பாவலரேறு!

- வே. ஆனைமுத்து உரை.

"பாவலரேறு தமிழ்க்களம் அமைக்கத் துணை நிற்போம்; அனைவருடைய போற்றுதலுக்கும் உரியவர் நம் பாவலரேறு" என்று பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய மார்க்சிய - பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி அமைப்பாளர் திரு. வே.ஆனைமுத்து கூறினார்.

திரு. வே. ஆனைமுத்து அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

"பாவலரேறு அவர்களின் தமிழ், தமிழினக் கொள்கைகளைப் பரப்ப, நிலைநாட்ட, ஆய்வுசெய்ய ஏற்ற களமாக இங்கே ஒரு மாபெரும் நிறுவனத்தை நிறுவவேண்டும் என்று, 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளைக் குழுவினர்' கட்டட வரைபடத்தின் மூலம் தமது எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் குழுவினர் எப்படியெல்லாம் திட்டமிட்டாலும் நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிய - பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில், அந்தச் செயல் நிறைவேற்றத்திற்கு, எங்கள் ஆற்றலுக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற அளவுக்குப் பொருள் திரட்டித் தர நாங்கள் அணியமாக இருக்கின்றோம்.

அடுத்து, பாவலரேறு அவர்களுடைய திருக்குறள் மெய்ப்பொருளுரையின் முதற்பகுதி இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த முயற்சியை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

தமிழகத்திலே 1949-இலே வீசத் தொடங்கிய திருக்குறள் தென்றல் - திருக்குறள் புயல் என்றுகூடச் சொல்லலாம். அது இடையிலே தொய்வுபட்டுவிட்டது. இப்போது அண்மைக் காலமாகத் தமிழ்த் தேசிய விடுதலை, தனித்தமிழ் வளர்ச்சி, தமிழ்வழிக் கல்வி, தமிழ்

ஆட்சிமொழி என்கின்ற கொள்கைகளெல்லாம் தூக்கிப் பிடிக்கப்படுகின்ற காரணத்தினாலே மீண்டும் திருக்குறளுக்கு ஒரு பெருமை, சிறப்புக் கொண்டாடப்படுகிறது என்று நான் கருதுகிறேன். திருக்குறளைப் பற்றி, அதன் உரைகளைப் பற்றி எனக்குக் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் உண்டு. ஆனாலும் அவற்றை நான் இங்கே பெரிதுபடுத்த விரும்பவில்லை.

பாவலரேறு அவர்களிடம் எனக்கு உள்ள முதல் தொடர்பு, அவரும் நானும் ஒரே ஆசிரியரிடம் பயின்ற மாணவர்கள். ஒரே வகுப்பிலோ, ஒரே பாடசாலையிலோ, ஒரே ஊரிலோ அன்று சென்றாலும் எங்கள் இருவருக்கும் மறைந்த தமிழ் மறவர் வை.பொன்னம்பலனார்தாம் ஆசிரியர். அவர் தம்மிடம் பயின்ற மாணவர்கள் எல்லோருக்கும் தமிழ் உணர்வை ஊட்டியவர். தமிழ் அறிவை ஆழமாகவும் சிறப்பாகவும் உண்மையாகவும் கற்பித்தவர். அவரிடம் பயின்ற மாணவர்கள் எங்கிருந்தாலும் நல்ல - தூய தமிழ் பேச வேண்டும்; திருக்குறளைப் படிக்க வேண்டும், பெரியாரைப் போற்ற வேண்டும் என்ற உணர்வோடு இருப்பார்கள். ஆக, நான் எந்தப் பாட்டையிலே, போய் இந்த உணர்வைப் பெற்றேனோ அதே பாட்டையிலேதான் நம் அனைவருடைய போற்றுதலுக்குமுரிய பாவலரேறு அவர்களும் அந்த உணர்வைப் பெற்றிருக்கிறார்கள்.

அடுத்து, பாவலரேறு அவர்கள் தனித்தமிழ் நாடு கோரிக்கையை முன்வைத்து மாநாடு நடத்தியபோது, அக் கொள்கை தந்தை பெரியார் அவர்களுக்கு மிக உவப்பான கொள்கையாக இருந்தமையினாலே, அந்த மாநாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கின்ற நோக்கில் நாங்கள் சென்றிருந்தோம். பாவலரேறு அவர்களைச் சந்தித்தோம்.

பாவலரேறு அவர்கள் ஏற்றிருந்த - உயிர் மூச்சாகக் கொண்டிருந்த தனித்தமிழ் வளர்ச்சி, தமிழ் ஆட்சிவழி பயிற்றுமொழி என்கின்ற எல்லாம் எங்களுக்கு உடன்பாடான கொள்கைகள். இன்றைக்கு நாங்கள் தனிநாடு என்பதை ஏற்றுக்கொள்ளா விட்டாலும் பாவலரேறு அவர்களுடைய எல்லா முயற்சிகளுக்கும் எங்கள் இயக்கமும், 'சிந்தனையாளன்' ஏடும் தொடர்ந்து துணை நின்றிருக்கின்றன.

அடுத்து, இங்கே பேசியவர்கள் முன்வைத்த செய்தி பாவலரேறு அவர்களுடைய நூல்களையெல்லாம் நாட்டுடைமை யாக்கவேண்டும் - அரசே வெளியிட ஆவன செய்ய வேண்டும் என்பது. இதனை நான் முழுமனத்தோடு வரவேற்கிறேன்!"

- இவ்வாறு திரு. வே.ஆனைமுத்து அவர்கள் உரையாற்றினார்.

தமிழ்த் தேசியத்தின் ஆசான் பாவலரேறு!

- பெ. மணியரசன் உரை -



"பாவலரேறு தமிழ்க்களம் விரைவில் நிறைவுற நாம் எல்லோரும் முயற்சி செய்வோம்; தமிழ்த் தேசியத்தின் ஆசான் பாவலரேறு'' என்று பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பெ.மணியரசன் கூறினார்.

திரு. பெ. மணியரசன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

"தமிழ் - தமிழின மேம்பாட்டுக்கான போர்க்களமாகவும் பாசறையாகவும் விளங்கவிருக்கும் பாவலரேறு தமிழ்க்களத்திற்குக் கால்கோள் நடத்தப்படுகிறது. விரைவில் அதன் திறப்புவிழா நடைபெற நாமெல்லாம் உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும். நான் முன்னரே சொல்லியிருக்கிறேன். இப்போது இந்த அரங்கத்திலே மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களால் இயன்ற வகையில் பொறுப்பெடுத்து, எங்கள் இயக்கத்தின் சார்பில், பாவலரேறு தமிழ்க்கள அமைப்புக்கு எங்களுடைய பங்களிப்பைச் செலுத்த அணியமாக இருக்கிறோம்.

பாவலரேறு அவர்களை நினைவுகூர்வது என்பது இயக்கத்தைப் பின்பற்றுவது, அதற்கான உணர்வுகளைப் புதுப்பித்துக் கொள்வது என்பதேயாகும். பின்பற்ற விரும்பாதவர்கள் அல்லது முடியாதவர்கள், வழிபட்டு, புகழ்ந்து பேசிவிட்டு ஒதுங்கிக்கொள்வார்கள். பாவலரேறு அவர்களை அப்படியெல்லாம் புகழ்ந்து அவருக்கு இழுக்குத் தேடக்கூடாது. நாம் அவரைச் சரியான நிலையில் விளங்கிக் கொள்ள வேண்டும். இறுதிக்கும் இறுதியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் யார்? அவர் தமிழ்த் தேசியத்தின் ஆசான்; இந்தியத் தேசியத்தை மறுத்தவர். இதுதான் நமக்கு நெஞ்சில் இருக்க வேண்டியது. இந்த நடுவணான கருத்தை விட்டுவிட்டு அவரைப் புகழ்வதிலே பயனில்லை.

இறுதிவரை சிறிதளவும் மாறாமல் தமிழ்த் தேசியத்தின் பக்கம், தமிழ்த் தேசிய விடுதலையின் பக்கம் பாவலரேறு அவர்கள் நின்றார்கள். அப்படியொரு தமிழ்ப் பேரறிஞர் நம்முடைய வாழ்நாளில் வாழ்ந்தார். கடைசிவரை அவர் தம் கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை. எந்தச் சிறைக்கும் அவர் அஞ்சியதில்லை. என்றும் அவருடைய கருத்து ஒன்றுதான். அதைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஐயாவைப் பற்றி, எங்களைப் பற்றியெல்லாம் புலனாய்வுத் துறையினர் 'தமிழின வெறியர்கள்' என்று பட்டியலிட்டு வைத்திருக்கிறார்கள். பாவலரேறு அவர்களைத் 'தமிழின வெறியர்களின் தலைவர்' என்று குறித்து வைத்திருக்கிறார்கள்.

பாவலரேறு செம்மாந்த மாந்தர். அவர் பாவலருள் ஏறு மட்டுமல்லர். மாந்தருள் ஏறு. மிகப் பக்குவமானவர். பொறுமையாகவும் அமைதியாகவும் பேசுபவர். ஒருமுறை அவர், "அறிஞர்கள் எப்போதும் வருத்தமாகத் தான் இருப்பார்கள்; கயவர்கள்தாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்" என்று குறிப்பிட்டார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அதிலேயுங்கூட இந்தியா ஒன்றியம் என்றிருக்கிறதே தவிரத் தேசம் என்று இல்லை. ஆனால், 'இந்தியா ஒரு தேசமன்று; இந்தியத் தேசியம் என்பதொன்றில்லை' என்று நாம் சொன்னால், அது தமிழின வெறியா?

பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார்க்கு நாம் ஆற்றும் கடமை ஒன்று இருக்குமே யானால், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தியத் தேசியத்தை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. தமிழ்த் தேசியந்தான் நம்முடைய தேசியம்.

பாவாணருடைய நூல்களை, மறைமலையடிகளாருடைய நூல்களை யெல்லாம் நாட்டுடைமை யாக்கியிருப்பது பற்றி அமைச்சர் தமிழ்க்குடிமகன் குறிப்பிட்டார். பாராட்டுகள். மகிழ்ச்சி! தந்தை பெரியாருடைய நூல்கள் இதுவரை நாட்டுடைமை யாக்கப்படவில்லை; அதற்கான காரணம் தெரியவில்லை. மராட்டிய மாநில அரசு அண்ணல் அம்பேத்கர் நூல்களை நாட்டுடைமையாக்கிச் சிறப்புற வெளியிட்டிருப்பது போல் தமிழ்நாட்டரசு பெரியாருடைய நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும்; வெளியிட வேண்டும்.

அடுத்து, பாவலரேறு அவர்களுடைய நூல்கள் நாட்டுடைமை யாக்கப்படவேண்டும். அரசுவெளியீடுகளாக அவை வெளிவர வேண்டும். இதுதான் இன்று நாம் அரசுக்கு வைக்கும் வேண்டுகோள்.

பாவலரேறு தமிழ்க்களம் விரைவில் நிறைவுற நாம் எல்லோரும் அவரவர் முயற்சிகளைச் செய்வோம்!"

- இவ்வாறு திரு. பெ.மணியரசன் பேசினார்.

திருமதியைக் கைவிடுக !

❑ *மணமான மகளிர்க்குரிய அடைமொழியான திருமதியைத் தவிர்த்துத் திருவாட்டி என்றே குறிப்பிடுகிறீர்களே, ஏன்? மதி என்பது பிறமொழிச் சொல்லா?*

- ம.தேவநம்பி திருவகிந்திபுரம்.

* அறிவு, அளவீடு, திங்கள் முதலானவற்றைக் குறிக்கும் மதி என்பது தமிழ்ச்சொல்லே. ஆனால் திருமதியில் இடம் பெற்றிருப்பது அத் தமிழ்மதியன்று. ஸ்ரீமதியிலுள்ள சமற்கிருத மத்-மதி.

ஸ்ரீமதியைத் தமிழ்ப்படுத்த எண்ணியவர்கள் ஸ்ரீயை மட்டும் முன்னை வழக்குப்பற்றித் திருவாக்கிவிட்டனர். மதி என்னும் அவ்வடசொல் திருவோடு ஒட்டிக்கொண்டு தொடர்கின்றது. ஆகவே அத் திருமதியைக் கைவிடுதலே நன்று.

தமிழில், திரு என்பது ஆண் பெண் என்னும்இருபாற்குரிய பொதுச சொல்லே. ஆயினும் திருவாளன் என்னும் ஆண்பாற்குரிய பெண்பாற் சொல் திருவாட்டி என்பது.

❑ *"தமிழாசிரியர் பள்ளியில் பாடம் நடத்தும்போது செய்வினை செயப்பாட்டுவினை எனப்பாடம் நடத்துவார். இதனால் வாழ்வில் பயனில்லை" என்று பட்டிமன்ற நடிகர் (நடுவர்) இலியோனி கூறியுள்ளாரே?*

- இளங்கோவன், ஈரோடை.

* முதல்வர் அமைச்சரவையைக் கூட்டினார் என்பது செய்வினை. முதல்வரால் அமைச்சரவை கூட்டப்பட்டது என்பது செயப்பாட்டுவினை. முதல்வர் அமைச்சரவையைக் கூட்டப்பட்டது என்றோ, முதல்வரால் அமைச்சரவை கூட்டியது என்றோ இவ்வாறே வேறு வகையாகவோகூறினால் அது கேட்பவர்களுக்குக் குழப்பத்தை விளைவிப்பது மட்டுமன்றிப் பேசியவர்கள் நிலை குறித்து ஐயப்பாட்டையும் ஏற்படுத்தும்.

ஆகவே அறிவுத் தெளிவுள்ளவர்கள் செய்வினை செயப்பாட்டுவினையால் வாழ்வில் பயனில்லை என்று கூறமாட்டார்கள்.

ஆங்கிலக் கல்விக்கூடங்களின் பக்கம் சென்று Active Voice - Passive Voice கற்பதனால் பயனில்லை என்று கிண்டல் பேசினால் கல்லடி படாமல் தப்புவதே பெரிது.

- குரிசில்

வெற்றி மலரை எங்ஙனங் கொய்வது?

முக்கல் ஒலியும் முனகல் இசையும்
நக்கல் பேச்சும் நடுங்கல் நடையும்
இக்கால் இளைஞ ரிழிவைக் காட்டும்
அக்கா லிருந்த அருந்தமிழ்க் கலைகள்
ஆடல் பாடல் இலக்கிய மெல்லாம்
தேடல் நிலையில் தேங்கிப் போயின.
பார்ப்பனக் கலைதான் இந்தியக் கலையென
ஊர்ப்பணச் சுருட்டலில் ஊளை யிடுவதும்
வல்லர சினோடு கூடித் திளைப்பதும்
சொல்லொணாக் கொடுமைகள் அல்லவா இன்று!
மதவியல் பரப்பலும் மதிதனை அழிப்பதும்
இதுநிலை யறியாத் தமிழர் இவரிடை
நாளொரு பொழுதும் விதைத்திடும் நஞ்சாய்
ஆளொரு பக்கம் அழியச் சிதைக்கின்
யாரிதை மீட்பது; தமிழரைக் காப்பது?
மட்டைப் பந்தும் மயக்க ஆட்டமும்
ஓட்டச் சுரண்டும் நோக்கமும் நம்மை
திக்கால் ஒருபுறந் திரிய அலைத்தே
இக்கால் இழிநிலை மறைத்து மயக்கிக்
காட்சிப் பெட்டியில் இதையே பரப்பிக்
களிப்பில் குதித்துக் கொழுக்கின் றனவே!
இவற்றின் வழியாய் மயங்கிய நிலையில்
எவற்றின் வழியாய் இயக்கங் கொள்வோம்!
உழைப்பின் சிறப்பும் உழைப்போர் பொறுப்பும்
பிழைப்போர் கையில் பதுக்கப் பெற்ற
விளைச்சல் பொருள்கள் நிலவுள் ளிருப்புகள்
திளைத்தல் நமக்காய் என்பதும் எக்கால்?
எற்றை நம்மவர் விடிவு கொள்வரோ?
மற்றை ஆளுமை விரட்டி வாழ்வரோ?
ஒற்றைத் தமிழனைப் பாடிய பாவலன்
இற்றைக் கிலையே நம்மிடை
வெற்றி மலரை எங்ஙனங் கொய்வதோ?

- பித்தன்.

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

கொள்கைகள் வெற்றிபெறுதற்குக் கூடியுழைப்போம்! வீடுபெறுவோம்!

'எழுகதிர்' அரு. கோபாலன் சூளுரை!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 64-ஆவது ஆண்டு பிறந்தநாள்விழா வடசென்னைத் தமிழ் இளைஞர் கழகத்தின் சார்பில் 22.3.97 அன்று கொண்டாடப்பட்டது.

வண்ணைக் காமராசர் தொடக்கப்பள்ளியில் நடந்த இவ்விழாவுக்கு 'முகம்' திங்களேட்டின் ஆசிரியர் திரு. மாமணி தலைமை தாங்கினார். தமிழ் இளைஞர் கழகத்தின் செயலாளர் திரு. கோ. சுந்தரேசன் அனைவரையும் வரவேற்றார்.

'முகம்' மாமணி தம் தலைமையுரையில் "பாவலரேறு ஐயா அவர்கள், தமிழ் - தமிழர் - தமிழ்நாடு பற்றிய உரிமை என்று வருகிறபோது, எந்த நிகழ்வானாலும், யார் நடத்தினாலும் முன்னின்று முதல் குரல் கொடுத்தவர். அந்த உள்ளப்பாங்கு தமிழர் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பாவலரேறு அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து, 'எழுகதிர்' ஆசிரியர் அரு.கோபாலன் சிறப்புரையாற்றினார். அவரது உரை வருமாறு :

"1965 - ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உண்மையான தளபதி பாவலரேறு அவர்கள்தான். 1938-இல் நடந்த முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மறைமலையடிகள் போன்ற தனித்தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டாலும், இரண்டாம் இந்தி எதிர்ப்புப் போரில்தான் பாவலரேறு தலைமையில் தனித் தமிழ் இயக்கம் - தமிழ் உலகளாவிய வளர்ச்சியினைக் கண்டது. 'தென்மொழி' ஏடுதான் அதன் போர் முரசமாக விளங்கியது. உள்ளபடி தமிழ்த் தூய்மை கோரும் இயக்கமே 'தென்மொழி இயக்கம்' என்ற பெயரில்தான் நாட்டோரால் அறியப்பட்டிருந்தது.

அப்போது நாம் தமிழர் இயக்கத்தின் கொள்கை ஏடாகிய 'தமிழ்க்கொடி'யின் ஆசிரியர் பொறுப்பில் இருந்த நான், ஐயா அவர்களின் எழுத்துகளை அப்படியே எடுத்து வெளியிட்டேன்.

அவர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி சிறையில் அடைக்கப்பட்டதைக் கண்டித்துத் 'தமிழுக்குச் சிறையா?' என்று ஆசிரியவுரை எழுதினேன். எங்களுக்குள் இப்படி ஒத்த கொள்கையால் உந்தப்பட்ட இதழ்த் தொடர்பு இருந்ததே யொழிய, ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் உச்சநிலை அடையும்வரை நாங்கள் சந்தித்ததுகூடக் கிடையாது.

ஆனால் தமிழ் விடுதலைப் போராட்டமாகவே வளர்ந்துவந்த அந்த இந்தியெதிர்ப்புப் போராட்டத்தைத் தங்கள் வருவாய்க்கான வேட்கைக்காடாக மாற்ற எண்ணிய அரசியல்காரர்கள், 1937-இல் தமிழ்நாட்டில் இந்தியைப் புகுத்திய இராசாசியையே மாற்றிவிட்டதாகக் கூறிக்கொண்டு, இந்திக் களத்தில் கொண்டு வந்து நிறுத்த, அவர் தமிழுக்கு ஆதரவாக அமைய வேண்டிய அதன் நோக்கத்தையே ஆங்கிலத்திற்கு ஆதரவாகத் திசைதிருப்பிவிட்டார். அதன் பயனைத்தான் (ஆங்கில வேட்கை அடிமைத்தனத்தை) இப்போது நாம் நுகர்ந்துகொண்டிருக்கிறோம்.

இங்கே திருக்குள் அதிகாரம் ஒன்றின் தலைப்பிற்குப் பாவலரேறு கொடுத்த புதிய விளக்கம் எனக்கு நினைவுக்கு வருகிறது. 'சிற்றினம் சேராமை' என்ற திருக்குறள் அதிகாரத் தலைப்பிற்குத் "தமிழ் நாட்டில் சிற்றினமாக இருக்கின்ற பார்ப்பனரை அருகில் கூடத் தமிழர்கள் சேர்த்துக் கொள்ளக்கூடாது" என்று அவர் கூறிய புதிய பொருள் எத்தனைப் பொருத்தம் பாருங்கள்!

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், குன்றக்குடி அடிகளார், தமிழர் தந்தை ஆதித்தனார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, காயிதே மில்லத்து இசுமாயில் சாகிபு முதலான அத்தனைத் தமிழர் தலைவர்களும் ஒன்றாக நின்று நடத்திய அந்தத் தமிழ்காக்கும் போராட்டத்தை - இந்தியெதிப்புப் பெரும்போரை ஒரே ஒரு பார்ப்பனரான இராசாசி சேர்ந்து கொள்ள இசைந்ததனால் ஆங்கில ஆதரவுப் போராக மாற்றிவிட்டாரே!

பின்னர் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் இளையவர்களின் கைக்கு வந்து எழுச்சி கண்டபோது, அந்த எழுச்சிக்குத் தமிழ்நாட்டில் வலுச்சேர்க்கும் பணியில் பெருஞ்சித்திரனாருடன் நானும் என்னை இணைத்துக் கொண்டேன். அதுமுதல் ஐயாவின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒவ்வொரு நடவடிக்கையிலும் என்னை வலிய அழைத்து இணைத்துக் கொண்டார்கள். அதற்கு நான் தகுதியுடையவனா என்று எனக்குத் தெரியாது. ஆனால் தமிழ் - தமிழர் - தமிழ்நாட்டு விடுதலையில் உண்மையான பற்றும், போலித் தனமற்ற செயல்பாடும் உடைய ஒவ்வொருவரையுமே பாவலரேறு அடையாளம் கண்டு

அரவணைத்துக் கொண்டார். அதில் நான் ஒருவனாக இருப்பதை எனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.

எத்தனைப் பெரிய துயரம் வரினும் ஐயா அவர்கள் கண்கலங்கி நான் பார்த்ததில்லை. ஆனால் ஈழத்துப் போராளித் தலைவர்களை ஒற்று கூட்டிவைத்து, அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாததால் இனம் அழிவதை எடுத்துரைத்தபோது அவருடைய கண்களில் நீர்வழிந்ததை நான் முதல் முதலாகக் கண்டேன்.

ஆம்; தமக்குற்ற இன்னலையோ, தம் குடும்பத்திற்குற்ற இடர்ப்பாடுகளையோ கண்டு கவலைப்படாத அவர்கள், தமிழினத்திற்கு வந்த இடையூறுகளைக் களைவதற்காக - அவற்றை ஒன்றுபட்டு முறியடிப்பதற்காக அகவையிலும் பட்டறிவிலும் குறைந்த ஈழத்து இளைஞர்களிடம் அழுது மன்றாடினார் என்றால் அவருடைய தமிழினப்பற்று எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஆயிரம்தான் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழன் ஒருவனுக்கு போட்டியாக ஒரு தமிழனல்லான் வளருவானாயின் தமிழனையே ஆதரித்து நிற்க வேண்டும் என்பது பெருஞ்சித்திரனார் தமிழர்களுக்குக் கற்றுக் கொடுத்த பாடமாகும். அந்த முறையில்தான் கலைஞரை, காமராசரை அவர் தாக்கியதும், தூக்கியதுமாகும்.

பெருஞ்சித்திரனாருக்குத் தமிழகத்தில் உருவாகியிருந்த ஆதரவை, ஒரு காலத்தில் அவர் பின்னால் அணிவகுத்து நின்ற இளைஞர் கூட்டத்தை, மற்றவர்களைப்போல் ஊதிய நோக்கில் அவர் பயன்படுத்திக் கொண்டிருப்பாரேயானால், இன்று அவர்குடும்பமும் ஒரு கோடிச் செல்வக் குடும்பமாக இருந்திருக்கும். ஆனால் அவரோ, தம்மைப் பற்றியோ, தம் குடும்பத்தைப் பற்றியோ கணக்குப் போட்டுக்கொண்டிராமல் தமிழ் மொழியைப் பற்றி, தமிழினத்தைப் பற்றி, தமிழ் நாட்டைப் பற்றியே இறுதி மூச்சடங்கும் வரை எண்ணிக் கொண்டிருந்தவர்; இயங்கிக் கொண்டிருந்தவர். அதாவது தமிழ்காக்கும் இயக்கமாகவே திகழ்ந்தவர். அந்த இயக்கம், அதாவது அவருடைய கொள்கைகள் வெல்லாமல் தமிழுக்கோ, தமிழருக்கோ, தமிழ்நாட்டுக்கோ வெற்றியில்லை. எனவே, பெருஞ்சித்திரனார் கொள்கை வெற்றிக்காகக் கூடி உழைப்போம். பீடு பெறுவோம்!"

இவ்வாறு அரு.கோபாலன் உரையாற்றினார். தலைவர் முடிவுரைக்குப்பின் ஆனந்தகுமார் நன்றிகூற, விழா நிறைவடைந்தது.

வடசென்னையில் உள்ள பல தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்புறச் செய்தனர்.

நூல் அறிமுகம்

நூற் பெயர் : **தமிழ்க் குயில்**

ஆசிரியர் : பாவலர் அன்பு ஆறுமுகம்

பொருள் : முப்பெரும் பிரிவுகளில் பல்வேறு தலைப்புகளில் அமைந்த பாக்களின் தொகுப்பு

வெளியீடு : வாசுகி பதிப்பகம்,
புதுத்தெரு, மாயனூர்
கரூர் (தீரன் சின்னமலை) மாவட்டம் 639108.

விலை : உரு. 20.00

நூலை அறிமுகப்படுத்தும் ஆசிரியரின் வரிகள். 'தமிழ்மொழி தமிழினம், தமிழ்நாடு' என்னும் மூன்றுமே நான் முடமாகிப் போகாமல் முனைப்புடன் பாட்டெழுத என்னை முடுக்கின.

'இந்த நிலவுலகப் பந்தையே புரட்டிவிடக் கூடிய நெம்புகோல் பாவினை உங்களில் யார் பாடப் போகிறீர்கள்' என்று வினவிய பாவலன் ஒருவனின் வினாவுக்கு விடையாக என் பாக்கள் குமுகாய விழிப்புணர்ச்சியை ஒரு புல்லின் நுனியளவேனும் உயர்த்துமானால், அதுவே இந் நூலின் வெற்றியாகும்."



நூற்பெயர் : **தலித் மக்களின் தொடர் முழக்கப் போர்.**

விலை : உரு. 20.00

வெளியீடு : தொல் தமிழர் வெளியீட்டகம்

கிடைக்குமிடங்கள் : 1. சி.நிக்கோலசு,
அம்பேத்கர் பேரவை -
18, பாலசுப்பிரமணி மனை, மின் குடியிருப்பு
மகாராசபுரம் - விழுப்புரம்

2. அரங்க. குணசேகரன்
தமிழக மனித உரிமைக் கழகம்
உட்டங்காடு - 614 803, தஞ்சை மா.வ.

இரட்டை வாக்குரிமை, பஞ்சமி நிலங்களை மீட்கக் கோரி, தாழ்த்தப்பட்டோர் மீதான கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989,

புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து, உழைக்கும் மக்களுக்கான புதிய கல்வி கொள்கை..., தலித் மக்களுக்கு இட ஒதுக்கீடு உயர்வும், தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு கோரி..., கட்டாய வேலை வாய்ப்பு கோரி ஆகிய ஏழு தலைப்புகளில் ஏழுவர் கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

தாழ்த்தப்பட்டோர் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பல புதிய ஏடல்களைக் கூறி ஆயும் தொகுப்பு நூல்.



நூற்பெயர் : **பாவாணர் புகழ்ச்சிந்து.**

ஆசிரியர் : மலேசியப் பாவலர்
ஐ. உலகநாதன்

பொருள் : மொழி நூல்
மூதறிஞர் பாவாணரின்
புகழ்பாடும் இசைப்பாக்கள்
(சிந்து) தொகுப்பு
-பல்வகைக் குறிப்புகளுடன்.

வெளியீடு : உலகத் தமிழ்க் கழகம் பெங்களூர்.

கிடைக்குமிடம் : சி.பூமணி.
என்.10/2,ஐந்தாவது குறுக்குச்சாலை,
எல்.என்புரம், சீராமபுரம்,
பெங்களூர் 560021.

விலை : உரு.20.00

நூலை அறிமுகப்படுத்தும் ஆசிரியரின் வரிகள் "பாவாணர் புகழ்ச்சிந்து என்னும் இந்தப்பாட்டு நூல், தன்னலம் மறந்து தமிழ்நலம் புரந்த அந்தத் தனித்தமிழ் மாக்கடலின் ஓசை, ஓசை நயம் மிக்க சிந்துப்பாட்டாக உலகோர் செவிகளில் எல்லாம் எதிரொலிக்க வேண்டும் என்ற விருப்பத்தின் விளைவு.

இன்னொரு வகையில் இதுப்பற்றி இப்படிச் சொல்வேன்.

செந்தமிழ்ப் பாவாணர் பணி - இதைச்
செய்திடச் செய்தவர் சி.பூ.மணி
சிந்திசையாய் முந்துறவே
வந்து நடை பயின்ற திந்த யாப்பணி - இதில்
வெந்தொழியும் எந்தமிழர் பிணி! "

O

பழைமை நலம்!

- கடுங்கோ-

மக்களுக்கு இயல்பாகவே புதுமையிலேதான் நாட்டம் மிகுதி. ஆகவே, புதுமை நாளடைவில் பழைமை யாகும்போது அதன்பால் சலிப்பு ஏற்படுகின்றது; மதிப்புக் குறைகின்றது. அவ்வாறு மதிப்புக் குறைவது மக்களின் மனப்பான்மையால் மட்டுமன்று. பொருள்களெல்லாம் பெரும்பாலும் நாளேற நாளேறப் பொலிவும் வலிவும் குன்றிப்போவதுதானே இயற்கை.

பழங்காலப் பொருள்களைக் காண்பதிலும், வரலாறுகளைத் தெரிந்துகொள்வதிலும் எல்லோருக்குமே ஆர்வம் உண்டு. தொல்பொருள் காட்சிக்கூடங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. பண்டைக்கால வரலாற்று நிகழ்ச்சிகள் நம் உள்ளத்தை ஈர்க்கின்றன. ஆனால் அப்பொருள்களும் நிகழ்ச்சிகளும், தம்மளவில் பழையனவாயினும் இன்று அவற்றைக் கண்ணுறுவதும் கருத்தில் கொள்வதும், ஒரு வகையில் புதுமை நாட்டத்தின்பாற்பட்டனவே.

நிலைபெற்ற இவ்வியற்கைக்குத் தலைமாறாகப் பழைமையும் சிலவகையில் பாராட்டப்படுகின்றது. பழைமையான நட்பின் சிறப்புரிமை பற்றித் திருக்குறள் பேசக் காண்கிறோம். சில பொருள்கள் பழைமையின் மிகுதிக்கேற்ப மதிப்பேறப்பெறுகின்றன.

புதிய அரிசியைவிடப் பழைய அரிசியே சிறந்ததாம். அதாவது புதிதாக அறுவடை செய்து கொணர்ந்த நெல்லினின்று உடனடியாக அறைத்தெடுக்கப்பட்ட அரிசியைவிட, முன்னரே சேமித்து வைக்கப்பட்ட நெல்லினின்று எடுக்கப்பட்ட அரிசியே உடலுக்கு நல்லது; தீங்கு விளைக்காது என்று பத்திய உணவாக அதனைப் பரிந்துரைப்பர் பட்டறிவாளர்.

நாட்பட நாட்படத் தரத்தால் உயர்வனவற்றுள் தேறலும் ஒன்று. பழந்தேறல் நாவிற்பட்ட அளவிலேயே தேள்கொட்டியது போன்று விறுவிறுப்பேறுமாம். 'தேட்கடுப்பன்ன நாட்படுதேறல்' என்கிறார் ஔவையார். கொடிமுந்திரிச் சாற்றாலான மேலைநாட்டு மது (Wine) வகையில் நூற்றாண்டுப் பழையனவும் உண்டென்றும், பழைமையின் அளவைப் பொறுத்துச் சுவையும் பயனும் மிகுதலால் அதன் விலைமதிப்பும் படிப்படியே கூடுமென்றும் அறிகிறோம்

புதுமை பழைமை என்பவற்றை யொட்டி இளமை முதுமை பற்றிய சிலவற்றையும் ஈண்டுக் காண்போம்.

அறிவுத் துறையில் இளமையை விட முதுமைக்கே மதிப்பு மிகுதி. முதுமைப்பட்ட அறிவு முதுக்குறை என்று சிறப்பிக்கப்படுகின்றது. (முது-முதுக்கு-முதுக்குறை முதுக்கு உறுதல்- அறிவு நிரம்புதல்)

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்

என்னும் திருக்குறளில் முதுக்குறை நயமுற விளங்கக் காணலாம்.

கற்றறிவான் மட்டுமன்றிப் பட்டறிவானும் மேம்பட்டவரை மூதறிஞர் என்றல் வழக்கு. பட்டறிவுக்கும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்கும் அடிப்படையாய் இருத்தலின் முதுமையும் பெருமையுறுகின்றது. ஆகவே,சிறப்பான ஆராய்ச்சியில் ஈடுபடுவோர்க்கும் பொறுப்பான பதவியில் அமர்த்தப் பெறுவார்க்கும் முதுமையும் ஒரு தகுதியாகக் கொள்ளப்படும். 'வரைவின் மகளிர்க்கு இளமையும் வழக்கறிஞர்க்கு முதுமையும்' (சிறந்தன) என்பது ஒரு சொலவடை.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

என்று அறிவுறுத்துகிறார் பெருநாவலர். ஈண்டுக் கூறப்படும் முதிர்ச்சி அறிவு பற்றியது மட்டுமன்று; அகவைபற்றியதுமாகும்.

மூத்தோரை இல்லா அவைக்களம் பெருமையுறுவதில்லை. சோழன் கரிகாலனுக்கு அகவைக் குறைவும் தகுதிக்குறைவாகக் கருதப்படாமையால், அவன் தன் இளமைக்கு நாணி, முதுமைக்கோலம் பூண்டு வந்து தீர்ப்பு வழங்கினான் என்று அறிகிறோம். இது நிற்க.

இனி, பழைமையால் பாராட்டப்படுபவற்றுளெல்லாம் தலை சறந்து விளங்குவது மொழியே. மற்றையவற்றின் பழைமையின் சிறப்புக்கும் பல்வேறு வகையில் எல்லையுண்டென்றாலும் மொழி அவ்வெல்லைக்கு அப்பாற்பட்டதே.

மொழியால் மக்கள் பெறத்தக்க பயன்கள் அனைத்தையும் குறைவறத் தரத்தக்க நிறைவளங் கொண்ட மொழிதான் காலத்தை வென்று இருவகை வழக்கிலும் நீடு நின்று நிலவ முடியும். அவ்வாறின்றிப் பட்டொழிந்த மொழிகளும் பலப்பல. ஆகவேதான், மொழியின் தொன்மை அதன் சிறப்புக்கூறுகளுள் ஒன்றாகப் பெரிதெடுத்துப் பேசப்படுகிறது.

பல்லாயிரக் கணக்கினவாகப் பட்டியலிடப்படும் மொழிகளுள் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுக்கு முந்திய பழைமையுடைய மொழிகள் மிகச்சிலவே. அவைதாமும் தமிழை நோக்க மிகப்பிந்தியனவே.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட எபிரேய மொழி நூலொன்றில், மயிலிறகைக் குறிக்கும் தோகை(துகி) என்னுந் தமிழ்ச்சொல் இடம் பெற்றிருப்பதைத் தமிழின் தொன்மையைக் காட்டும் இலக்கியச் சான்றாக எடுத்துக்காட்டுகிறார் அறிஞர் கால்டுவெல். ஆனால் அம் மூவாயிரத்திற்கும் இருநூறு ஆண்டுகள் முற்பட்ட ஆரிய வேதத்தில் நூற்றுக்கணக்கான தமிழச்சொற்கள் உள்ளமையே தமிழின் தொன்மைக்கு அதனினுஞ் சிறந்த இலக்கியச் சான்றாகுமென்று எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறார் மொழிஞாயிறு பாவாணர்.

மேலும், "வேத ஆரியர் நாவலந்தேயத்திற்குள் (இந்தியாவிற்குள்) கால் வைப்பதற்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முந்திய பாபிலோனிய மொழியிலும், ஆரியம் என்னும் பேரே தோன்றுவதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முந்திய எகிபது மொழியிலும் மறுக்க முடியாத தமிழ்ச்சொற்கள் அடிப்படையாய் உள்ளன" என்றும், "மேலை யுலகில் முதன் முதல் நாகரிகமடைந்த (கி.மு.5000) எகிபது நாட்டுமொழியில் ஒரு சொல் இருசொல் அல்ல, பல சொற்கள் அவையும் அடிப்படைச் சொற்கள் தமிழாய் இருந்ததே தமிழின் தொன்மைக்குத் தலைசிறந்த இலக்கியச் சான்றாகும்" என்றும் மொழிநூல் மூதறிஞர் பாவாணரின் விளக்கம் தொடர்கின்றது.

ஆகவே, தமிழின் நெடுங்காலத் தொன்மையும், மற்றைய மொழிகளைக் காலத்தாலும் பின்னிறுத்தும் முன்மையும் அதன் தலையாய சிறப்புகளாக விளங்குகின்றன. ●

அழுகு ஒளி - இரேவதி வாழ்க!

தென்மொழி அன்பரும், இப்போது தென்மொழிப் பணிகளுக்குத் துணை நிற்பவருமான, அனைவரிடமும் பழுகுதற்கு இனிமையான அன்பர் திரு. ச.அழுகு ஒளி அவர்களுக்கும் செங்கற்பட்டைச் சார்ந்த வழக்கறிஞர் செல்வி. ப.இரேவதி அவர்களுக்கும் 2028 விடை 5 (19.5.97) அன்று செங்கற்பட்டு வாசுகி திருமண மண்டபத்தில் திருமணம் இனிது நடைபெற்றது. திருமணத்தையொட்டி வாழ்த்தரங்கம் ஆனூர் கோ.செகதீசன் அவர்களின் தலைமையில் புலவர் தி.நா. அறிவு ஒளி, திரு. மா.பூங்கன்றன், திரு. இரா.சித்திரவேலன், தோழர் மு.வேல்முருகன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தியுரையாற்றினர்.

மயங்க வேண்டாம்!

- பாவலர் ப.எழில்வாணன் -

வடநாட்டான் விடமாட்டான்! வம்பிழுத்து
வாலாட்டி வசைகள் பாடி
இடம்பார்த்துக் கழுத்தறுத்தே எக்களிப்புச்
செய்யாமல் இருக்க மாட்டான்!
அடமானம் வைத்துவிட்டே அரசிழந்தே
அவனடியை அறிவாய் எண்ணி
மடமையினால் தொழுதுழன்றே மறத்தமிழன்
அடிமையென வாழ்தல் நன்றோ!

நெஞ்சினில் துணிவிழந்து நிற்பதற்கும்
துணைதேடி நிலையில் தாழ்ந்து
துஞ்சுகின்ற தமிழ்மகனே! துடித்தெழுந்தால்
தென்னவனே உலகை ஆள்வான்!
வஞ்சகரின் பொல்லாத வலைப்பட்ட
நிலைபோதும் ! வலிமை கொள்வாய்!
வெஞ்சமரில் அஞ்சாமல் விளையாடும்
தமிழ்வீரம் வீழ்தல் நன்றோ!

புறப்படடா! களம்நோக்கி! பூந்தமிழ்த்தாய்த்
தடந்தோளே! புயலே! ஓர் நாள்
இறப்பதற்குள் நாம்முடிக்க இருக்கின்ற
பெரும் பணியை ஏன்ம றந்தாய்?
பொறுப்பதிலை! தாய்பூண்ட புன்விலங்கை
அறுத்தெறிவாய்! பொங்கி நிற்பாய்!
மறப்புலியே! வடதிசையின் மாய்மாலப்
பொய்புளுகில் மயங்க வேண்டாம்!

செய்திகள்

தலைநகர்த் தமிழ்க்கழகத் தமிழ்வளர்ச்சி மாநாடு

சென்னைத் தலைநகர்த் தமிழ்க் கழகத் தமிழ் வளர்ச்சி மாநாடு, தி.பி.2028 மேழம் 13, 14 காரி ஞாயிறு (1997, ஏப்பிரல் 26, 27) ஆகிய நாள்களில், பாவாணர் நூலகத்தில் - பாவலரேறு பெருஞ்சித்திரனார் அரங்கத்தில் நடைபெற்றது.

முதல்நாள் (காரி) மாலை முனைவர் தமிழண்ணல் தலைமையில் மாநாடு தொடங்கியது. புலவர் த.சுந்தரராசன் வரவேற்புரையாற்றினார். அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் மாநாட்டு நிகழ்ச்சியையும், முனைவர் சாலையார் கண்காட்சியையும் தொடங்கிவைத்தனர். மூதறிஞர். வ.சுப.மாணிக்கனார் அவர்கள் படத்தை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகனும், பாவலரேறு ஐயா அவர்கள் படத்தை முனைவர் சாலினியாரும் திறந்துவைத்து உரையாற்றினர். முனைவர் ச.மெய்யப்பன் வெளியிட்ட மாநாட்டு மலரைத் திரு. சிற்றம்பலப்பாண்டியனும், முனைவர் சாலையாரின் 'தாய் எழில் தமிழ்' நூலைத் திரு. சா.சந்திரேசனும் பெற்றுக்கொண்டனர். முனைவர் சிலம்பொலி செல்லப்பன், பேராசிரியர் தீரன், ச.ம.உ., திரு. செஞ்சி இராமச்சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மறுநாள் (ஞாயிறு) முற்பகல் சிற்றிதழ்கள் கண்காட்சி தொடங்கிவைக்கப்பட்டது. பேரா. சேது தலைமையில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. தொடர்ந்து, வ.சுப.மாணிக்கனார் நினைவுப் போட்டிகளில் கலந்துகொண்டோர்க்குத் திரு. இராம விசுவநாதன், முனைவர் புரட்சிதாசன் ஆகியோர் பரிசு வழங்கினர். பிற்பகல், பேரா. இரா. இளவரசு தலைமையில் பயிற்றுமொழிக் கருத்தரங்கமும், தொடர்ந்து மாலையில் முனைவர் தமிழண்ணல் தலைமையில் நிறைவு நிகழ்ச்சியும் நடைபெற்றன.

புலவர் சாத்தனின் 'புதிய தமிழியக்கம்' நூல் வெளியிடப்பட்டது. திருவள்ளுவர் மழலையர் பள்ளி உள்ளிட்ட நான்கு தமிழ்வழி மழலையர் பள்ளிகளுக்கு ஊக்க நன்கொடை திரு. சா.சந்திரேசன் வழங்கினார். தமிழறிஞர்கள் பதின்மூவரை மருத்துவர் ச.இராமதாசு அவர்கள் (பா.ம.க.) சிறப்பித்தார். பல்துறை அறிஞர்பெருமக்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்; கலந்து கொண்டனர்.

அருட்செல்வன் - மதியொளி (சசிகலா) மணவிழா !

வேலூர் நற்றமிழ்க் காவலர் கு.மு. அண்ணல் தங்கோ அவர்களின் பேரனும் திரு. நா.செகநாதன் - நாவுக்கரசி இணையர்

மகனுமான நம்பி அருட்செல்வனுக்கும் திருவண்ணாமலை திரு. இலட்சுமணன் அவர்களின் மகள் நங்கை மதியொளி (சசிகலா)க்கும் தி.பி. 2028 மேழம் 7 ஞாயிறு (20.4.97) அன்று திருவண்ணாமலையில் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருக்குறள் மணி புலவர் இறைக்குருவனார், உ.த.மு.க. பொதுச் செயலாளர் திரு. மா.செ.தமிழ்மணி, திருவாளர்கள் சே.சே.தம்புராசு, இராம. தமிழ்ச்செல்வன், திருவாட்டி வசந்தா தண்டபாணி முதலானோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். திரு. தி.வே.சம்பந்தன் நன்றி நவின்றார்.

முனைவர் கடலூர் மணிமாறனுக்குப் 'பாவேந்தர் மரபுப் பாவலர்' விருது!

தி.பி. 2028 மேழம் 14 ஞாயிறு (27.4.'97) அன்று, பாவேந்தர் பிறந்தநாள் விழா, புதுவை அரசுச் சார்பில், பாவேந்தர் இல்லம் - அருங்காட்சி யகத்தில், சென்னை மேனாள் மாநகரத் தந்தை சா.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாவலர் இளமாறன் வரவேற்புரையாற்றினார். பாக்கொண்டல் மா.செங்குட்டுவன் தொடக்கவுரை நிகழ்த்தினார். சென்னைப் பாவேந்தர் பாசறையின் சார்பில், புதுவை மாநிலச் சட்டப் பேரவைத் தலைவர் வி.மெ.சி. சிவக்குமார் முனைவர் கடலூர் மணிமாறனுக்குப் 'பாவேந்தர் மரபுப் பாவலர்' விருது வழங்கினார். 'பாவேந்தர் தோட்டத்துப் பூங்குயில்கள்' என்னும் தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது.

திருவாளர்கள் உவமைப் பாவலர் சுரதா, சு.மன்னர்மன்னன், அரிமதி. தென்னகன், முனைவர் சரளா இராசகோபாலன், 'முகம்' மாமணி, முனைவர் இரா. திருமுருகன், க.தமிழமல்லன், மு.இறைவிழியன், கல்லாடன், பூவை.அமுதன், பாவலர் அன்பு ஆறுமுகம், நல்லாசிரியர் ப.கணேசன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புலவர் முத்து எத்திராசன் நன்றி நவின்றார்.

அருளியாரின் இரு நூல்கள் வெளியீட்டு விழா

விழுப்புரம் தமிழினத் தொண்டியக்கத்தின் சார்பில், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் தூயதமிழ் அகரமுதலிகள் துறைத் தலைவர் சொல்லாய்வு அறிஞர் அருளியாரின், 'அச்சங்களும் வெறிகளும் - ஓர் அகராதி', 'தென்மொழியின் தொண்டு' என்னும் இருநூல்களின்

வெளியீட்டு விழா, தி.பி. 2028 மேழம் 14 ஞாயிறு (27.4.97) அன்று மாலை, விழுப்புரம் சோதி திடலில் நடைபெற்றது.

தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மருத்துவர் க.பொன்முடி அவர்கள் தலைமையிலும், திரு.அ.நக்கீரன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இவ்விழாவில், திருவாட்டி தேன்மொழியருளி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். திரு எழில் இளங்கோ வரவேற்புரையாற்றினார். திரு. விழுப்பரையன் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் நூல்களை வெளியிட்டார். விழுப்புரம் நகர் மன்றத் தலைவர் திரு. இரா. சனகராசு, முனைவர் பெ.கோவிந்தசாமி (தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத் துறை) ஆகியோரும், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த திருவாளர்கள் க.குணத்தொகையன், தாமரைக்கோ, தெ.தமிழநம்பி, சீனு. அரிமாப் பாண்டியன், இரா.ச.சொக்கநாதன், இரா. அண்ணாமலை, அரு. முத்தமிழடியான், மா. அறிவுக்கண்ணு, எழில் பூங்குழலி தமிழ்வாணன் ஆகியோர் நூலைப் பெற்றுக்கொண்டனர். அமைச்சர் தமிழ்க்குடிமகன் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

நூலாசிரியர் ஆய்வறிஞர் அருளியார் உரையாற்றினார். 'பிரபா' இர.தண்டபாணி நன்றி நவின்றார்.

இருளில் விளக்காய் எழுந்தவன்!

-- வெண்பா வேந்தர் பொதிகைச் செல்வன், பவானி --

1. சொல்லாய்வு காட்டிநம் தொன்மைத் தமிழ்மொழியின்
வெல்லாற்றல் நாட்டியதன் வீறுரைக்க - அல்லார்
இருளில் விளக்காய் எழுந்தவனே இங்கோர்
அருளியெனும் பேறறிஞ னாம்!

2 'இவைதமி ழல்ல' எனும்சிறுநூல் ஒன்றே
அவையில் அருளிதிறம் ஆர்க்கும்! - நவையில்
'அயற்சொல் அகராதி' கற்றார் அகமே
வியந்து சிலிர்த்திடுவார் மெய்!

3. அணியணியாய் ஓங்கும் அறிவியலைக் கற்க
மணிமணியாய்ச் சொற்கள் வழங்கும் - துணிவில்
நிகரில் அருளி நிறைபுலமை தந்த
'அகர முதலி' அது!

4. அண்ணல் அருளி அளித்துள்ள நூல்களைப் போல்
திண்ணமாய் வேறெவரும் செய்வாரோ? - உண்மையைச்
சொன்னேன்கேள்! சொல்லாய்வில் தூயோன் அருளிக்கே
இன்றெங்கும் இல்லை இணை!

5. ஆழிசூழ் வையத்தின் ஆர்ந்த மொழிகளெல்லாம்
ஊழின் முயன்றே உணர்ந்ததிறம் - யாழினிய
பண்போல நெஞ்சுவக்கப் பற்பலவாய்க் காட்டுகின்றான்
கண்போல் அருளியவன் காண்!

6. தன்னிகரில் நம்மருளி தண்டமிழ்ப் பற்றினையும்
உன்னிவரை சொல்லாய் வுரையினையும் - என்னினிய
உள்ளத்தில் கண்டே உவந்துவந்து போற்றுகின்றேன்
வெள்ளம்போல் அன்பு மிகுந்து!

7. செந்தமிழ்த் தாயவள்தான் செய்த தவத்தாலே
வந்தான் அருளியெனும் மாவறிஞன்! - சிந்தையினில்
இப்புவியில் வாழும் எழில்மொழிகள் தேர் அருளிக்(கு)
ஒப்புரைக்க இங்கார் உளர்?

8. பிறப்பிலே சொல்லாய்வுப் பேரறிஞ னாகச்
சிறப்புறத் தோன்றிய செம்மல்! - திறப்பணிகள்
எண்ணிப் புரிகின்ற ஈடில் அருளிபுகழ்
கண்ணிற் கடங்காக் கடல்!

9. ஓங்கு தமிழின் உயிர்மாய்க்க எண்ணியே
ஈங்குவந்த பொல்லா இழிகுணத்தார் - தீங்கு
புரிந்த கொடுமை புதைத்தருளி தாய்ச்சீர்
விரிந்தொளிரச் செய்திடுவான் மெய்!

10. அழுதிருக்கும் அன்னை அருளிபணி யாலே
விழுதிருக்கும் ஆல்போல் விளங்கி - முழுதுலகும்
போற்றச் சிரித்தொளிரும் பொற்காலம் வந்ததென்று
சாற்றடா நற்றமிழா சாற்று!

செந்தமிழே வாழி!

(இசைப்பாடல்)

முன்னெடுப்பு

கோடி மனங்களிலே குலவுமொழி எந்தமொழி
கொங்குமலைத் தேன்சுவையைக் கொண்டமொழி எந்தமொழி
தேடிவந்தோர் உள்ளமெல்லாம் திளைக்கும் மொழி எந்தமொழி
தேங்காமல் ஓங்கி உயர்கின்ற தனிச் செந்தமிழே!

எடுப்பு

செந்தமிழே தாய்மொழியே நீவாழி
சீரொடும் சிறப்போடும் நீடூழி வாழி! (செந்தமிழே)

உடனெடுப்பு

சிந்தனை என்றும் நின் சேவடி நினைவாகி
முந்துறப் பணிகின்றேன் என்தாயே! (செந்தமிழே)

தொடுப்பு

இன்னுயிர் பிரிந்தாலும் என் தமிழை மறவேன்
இன்பமே நினை என்றும் நான் துறவேன்
ஐந்திலக் கணம் நீயே
அறுசுவைப் பொருள் நீயே
ஏழியல் குறள் நீயே என்னுயிரே!

எட்டுத் தொகை பதி னெட்டுக்கீழ்க்கணக்
குறைவாய் - நீ யுறைவாய்
தொட்டுப் பழகிய பத்துப் பாட்டினில்
நிறைவாய் - நீ நிறைவாய்!

கலைகளில் ஒளிர்பவளே!
கருத்தினில் மிளிர்பவளே!
கற்பதெல்லாம் எனதுமொழி தரும் நூல்களையே
நிற்பதெல்லாம் எனதுமனம் விரும்பிடும் வழியே!
உலகினிலே உயர்மொழியே!
உவமையிலாத் தனிமொழியே!

உடலினில் உயிரினில் உணர்வினில்
உளமதில் அறிவினில் உரையினில்
கருவென மிளர்வது
தமிழே! அமிழ்தே! நீ வாழி! (செந்தமிழே)

துகிலி பா. சம்பந்தம்

பெரியார் மாவட்ட
திருக்குறள் பேரவை இருபதாம் ஆண்டு நிறைவு விழா

திருக்குறள் மெய்ப்பொருளுரை அறிமுக வெளியீட்டு விழா

பாவலரேறு இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி தென்மொழி மலர் வெளியீடு

நாள் : *2028 ஆடவை, க (15.6.1997) ஞாயிறு*
இடம் : *சுழற் கழகக் கட்டடம்*
(Rotory Club) *பவானி, பெரியார் (மா.வ.)*

நேரம் : *காலை 9.00 - பகல் 1.00 வரை*
தலைமை : *புலவர் பொதிகைச்செல்வனார்*
வரவேற்பு : *திரு. நாகேசுவரன்*

படத்திறப்பு :

குன்றக்குடி அடிகளார் படம் - திரு. தி.அ.சண்முகசுந்தரனார் (துணைத் தலைவர் மாநிலத் திருக்குறள் பேரவை)

பாவலரேறு படம் - சொல்லாய்வறிஞர் ப.அருளி (தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

மறைமலைஅடிகளார் படம் - திரு. இரா. முத்துக்குமாரசாமி (சைவ சித்தாத்தாந்த நூற்பதிப்புக் கழகம்)

வேலாஅரசமாணிக்கனார்படம் - திரு. செ.நா.குப்பமுத்து ஐயா

திருக்குறள் மெய்ப்பொருளுரை அறிமுக வெளியீடு :
- சொல்லாய்வறிஞர் ப.அருளியார்

நூல் பெறுபவர்கள்

திரு. வேலா சக்திவேல் (குறளாயம்)
தொழிலதிபர் (J.K.K.) சுந்தரம்
திரு. சீனி தேவராசனார்

நன்றியுரை : திரு. துரை. மா.பூங்குன்றன்

பிற்பகல் 3 - மாலை 7 வரை

பாவலரேறு பெருஞ்சித்திரனார் இரண்டாம் ஆண்டு நினைவு மலர் வெளியீடு - நினைவேந்தல் நிகழ்ச்சி

தலைமை	:	'பாவேந்தர்' இராமலிங்கம்
வரவேற்புரை	:	'தென்மொழி' ப.துரையரசன்
தொடக்கவுரை	:	புலவர் .இரா.வடிவேலனார்
மலர் வெளியீடு	:	திரு. பழ.நெடுமாறன் (தலைவர், தமிழர் தேசிய இயக்கம்)
மலர் பெறுபவர்கள்	:	திரு. க.தமிழப்பன் திரு. கா.இளமுருகன் திரு. ப.அறிவுடைநம்பி திரு. வை.தமிழ்க்குமரன் திரு. பாவை நடவரசன் திரு. குறிஞ்சி சண்முகசுந்தரம் திரு. நிலா. வேங்கடவன் திரு. நிலவன்
நினைவேந்தல் உரை	:	சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன் திரு. கு.வெ.கி. ஆசான் திரு. கி.வே. பொன்னையன் திரு. மா.செ.தமிழ்மணி புலவர் அரசமாணிக்கனார்
நன்றியுரை	:	பாவலர் மலைமகன்

பொது நிகழ்ச்சி - பட்டிமன்றம்

மாலை 7 மணி முதல்

தமிழ் மேம்பாட்டிற்கான பெரும்பொறுப்பு
மக்களுக்கா ? - அரசுக்கா ?

தலைமை	:	திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார்.
நடுவர்	:	திரு. கு.வெ.கி. ஆசான்

மக்களுக்கே!	அரசுக்கே!
பேரா க. அரங்கசெல்வனார்	சிந்தனைச்செம்மல் கு.ச.ஆனந்தன்
திரு. கி.வே.பொன்னையன்	திரு. மா.செ.தமிழ்மணி
புலவர் சு. முத்துச்சாமி	பாவலர் மலைமகன்

குறிப்பு: பங்கேற்போர் இசைவுக்குத் தக நிகழ்ச்சி நிரல் மாறுதலுக்குரியது

அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

நம் ஐயா அவர்களின், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக வெளிவருகின்ற தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களில் 1986 வரையிலான இதழ்கள் கட்டடம் செய்யப்பெற்று சலுகை விலையில் தென்மொழி சுவடி 20 வரை மற்றும் தமிழ் நிலம் எண் 80 வரை, விற்பனைக்கு உள்ளன.

அன்பர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பதிப்பகங்கள், நூலகங்கள், பள்ளி, கல்லூரிகள், இந் நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம். விற்பனை விளத்தங்கள் கீழ் வருமாறு கொடுக்கப் பெறுகின்றன.

தென்மொழி		விலை
1.	சுவடி - 6 முதல் சுவடி - 11 முடிய உள்ள இதழ்கள்	15-00
2.	சுவடி - 11 - தொகுப்பு (முழுமையாக)	15-00
3.	சுவடி - 12 - தொகுப்பு (முழுமையாக)	15-00
4.	சுவடி - 16 தொகுப்பு -	17-00
5.	சுவடி - 19 தொகுப்பு -	18-00
6.	சுவடி 20 தொகுப்பு -	20-00
7.	சுவடி 21 தொகுப்பு முழுமையாக -	17-00
8.	சுவடி 22 தொகுப்பு முழுமையாக -	17-00
9.	சுவடி 23 தொகுப்பு முழுமையாக -	25-00
10.	சுவடி 24 தொகுப்பு முழுமையாக -	28-00
11.	சுவடி 25 தொகுப்பு முழுமையாக -	29-00
12.	சுவடி 26 தொகுப்பு முழுமையாக -	40-00
13.	சுவடி 27 தொகுப்பு முழுமையாக -	50-00

தமிழ்ச்சிட்டு		
1	குரல் 19 இசை 1 முதல் 12 முடிய குரல் 20 இசை 1 முதல் 12 முடிய - முழுமையாக	24-00
2.	குரல் 21 இசை 1 முதல் 12 முடிய குரல் 22 இசை 1 முதல் 12 முடிய - முழுமையாக	35-00

தமிழ் நிலம்		
1.	இதழ் 1 முதல் இதழ் எண் - 80 முடிய -	50-00
2.	இதழ் 81 முதல் இதழ் எண் 110 முடிய -	30-00
3.	இதழ் 111 முதல் இதழ் எண் 140 முடிய -	35-00
4.	இதழ் 141 முதல் இதழ் எண் 174 முடிய -	50-00

அஞ்சற் செலவுகள் தனி. பதிவஞ்சலில் பெற அஞ்சற் செலவுடன் மேலும் உருவா ஆறு மட்டும் சேர்த்தனுப்புங்கள்.

பாவலரேறு ஐயா அவர்களின்

திருக்குறள் மெய்ப்பொருளுரை

[முதற் பகுதி]

* முந்நூறு பக்க அளவில், எழுவகைப் பிரிவில் அமைந்த விரிவான முன்னுரையுடன் கூடியது!

* முதற்பத்து அதிகாரங்களுக்கான உரை

* பொருள்கோள்முறை, பொழிப்புரை, விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றைத் தாங்கியுள்ளது!

* பரிமேலழகர் முதல் பாவாணர் வரை பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளை ஏற்றும் மறுத்தும் எழுதப் பெற்ற விளக்கங்களைக் கொண்டது!

* நூற்றுக் கணக்கான நூல்களிலிருந்து மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் எடுத்தாளப்பெற்றது!

* ஆரிய நெறியை வீழ்த்தி அருந்தமிழ்நெறியை நிலைநாட்டுந் திறத்தது!

விலை : உரு. 150.00

வெளிவருகிறது!

பாவலரேறு ஐயா அவர்களின்

இரண்டாவது ஆண்டு நினைவு -
'தென்மொழி'ச் சிறப்பு மலர்

- ***அ**ரசியல் தலைவர்கள், அறிஞர்பெருமக்கள், பாவலர்கள், கலை வல்லுநர்கள் முதலானோர்தம்,*

  கட்டுரைகள்,

  பாடல்கள்

  கைவண்ணங்கள்

  ஆகியவற்றை தாங்கியுள்ளது!

- ***பா**வலரேறு ஐயா அவர்களின் வாழ்க்கைத் தொடர்பான*

  அரிய நிகழ்ச்சிக் குறிப்புகளும்

  ஒளிப் படங்களும்

  இடம் பெற்றுள்ளன!

- *'**தெ**ன்மொழி'ப் படைவீரர்களின் படைப்பாக்கங்களைக் கொண்டுள்ளது!*

- ***தி.பி.**2028 ஆடவை 1 ஞாயிறு (15.6.'97) அன்று பெரியார் மாவட்டம் பவானியில் நடைபெறும் விழாவில் வெளியிடப்பெறுகிறது!*

- ***தே**வைக்குத் தொடர்புகொள்க!*

- தென்மொழி

சென்னை - 600 005.

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. (தொலைபேசி : 854 7829)